# மாயம் நீர் கனவுகள்

அ. கந்தசாமி

27.06.94.

# கானல்நீர் கனவுகள்

## அ. கந்தசாமி

KAANALNEER KANAVUKAL

(A Collection of Poems)


By

A. KANDASAMY
12 Keon Place
Scarborough, Ontario
M1B 3C9



First Edition — April 1994

Type setting — Shyamala Navaratnam

Design & Layout — K. Navam

Cover Design — K. T. Kumaran



Copy Right — Author



Price — Cdn $ 2.00

First Publication

of
Nankavathu
Parimanam
1565 Jane St
P. O. Box 34515
Toronto, Ontario
Canada M9N 1R0

நான்காவது பரிமாணம் வெளியீடு – 1

தேவைகளுக்காய்
என்னைத் தேடும்
பார்வைகளுக்கு மத்தியில்
ஒளியிழந்த விழிகளில்
பாவையாய் என்னை
பதித்துக்கொண்ட
என் தந்தைக்கு

## கானல்நீர் கனவுகள்

நாளை மீண்டும் ஒரு வசந்தம்.....5
பாரமாய் பகலும் ஈரமாய் ஓர் இரவும்.....6
ஆவிகளுடன் ஒரு செவ்வி.....8
இராமாயண அனுமார்களும் நவீன நீரோக்களும்.....10
வட்டத்துள் வாழ்வு.....11
6/49.....13
ஓ! அந்தப்புள்ளிகள்.....14
விதைகள் உண்டு விளைநிலம் வேண்டும்.....16
காலத்தின் கரங்கள்.....17
எல்லைக் கோடாய் எழுந்துவா மாவலியே.....18
ஒரு வீணை நாதமிழக்கிறது.....20
வானம்பாடிகளும் வல்லூறுகளும்.....21
எனக்கு ஒரு சுதந்திரம் வேண்டும்.....23
பம்மாத்து.....24
முதற்காதல்.....25
முடிந்தகாதல்.....26
அழிவு என்பது ஆரம்பமல்ல.....27
பாட்டொன்று நான் பாடவேண்டும்.....28
கல்யாணமாகாக் கற்பனைகள்.....30
பேரோஸும் நானும்.....31
கானல்நீர் கனவுகள்.....32

அ. கந்தசாமி

# நாளை மீண்டும் ஒரு வசந்தம்

அஸ்தமனச் சூரியனின்
அந்தியக் கடன்களுக்காய்
அழுது ஈரலிக்கும் பனிஇரவு.
பச்சைத் தேமல் பரவிய பூமி
பட்ட இலைகளின் பாய்விரிப்பில்
பழுத்துப் போய்க் கண்ணயரும்.
நிறங்களின் ஜனிப்பில்
நிலமெல்லாம் பூத்த வசந்தம்
நாட்களின் ஓடிவில்
நாளையை இழந்து....

ஊசிக்கால் கிளைகளின்
ஊஞ்சலில் உறங்கி
மேப்பிள் இலை வருடி
மெல்லவே மூச்செறியும்
தென்றலும் கள்ளமாய்க்
குளிருடன் கலந்தவொரு
காந்தர்வத்திற் கலைந்தே போகும்.
முக்காடு நீக்கி முகம் காட்டும் நிலவும்
மாதவிலக்கான மாதினைப் போலவே
தொட்டுவிடாத் தூரத்தில்...

வெண்பனித் துருவல்கள்
வெய்யிலிற் காய்ந்து
வெண்ணையாய்ப் பரவிய
வெளிகள் எங்கும்
கறைகளாய்ப் படியும்
கால்களின் தடங்கள்.
புகைக்கும் பனிக்குள்
புதையுண்ட புற்களும்
கம்பளிச் சட்டையின்
கதகதப்புள்ளே
சதைகளைப் புதைத்த
சனங்களுமாக....

சொர்க்கத்தின் நினைப்பினில்
சொந்தங்கள் மறந்து
அடிக்கு ஆயிரம் வேலிகளிட்டு
அறிவுக்கு அழகாய்த்
தாழ்ப்பாளுமிட்டு
புல் நுனித் துளியினில்
புவியதை அடக்கியே
புதிய வசந்த நதியைத் தேடும்
புதிதாய்ப், பழையதாய்ப், பூர்வீக
குடிகளாய்
நடுங்கியே வாழும்
நரகல் மனிதர்கள்!

அ. கந்தசாமி

# பாரமாய்ப் பகலும் ஈரமாய் ஓர் இரவும்

பகற் காலங்கள்
குறைப் பிரசவக்
குழந்தையைப் போல
மிகவும் சோம்பலாக
நெட்டிச் சுள்ளிகள்
முறிபடும் ஓசைகளில்
நிமிடங்களைக் கரைத்து....

இயந்திரக் கனவுகளின்
இடிபாடுகளுக்குள்
மல்லாக்கச் சரிந்தவன்
நீட்டி நிமிரவோ
ஒருச்சரித்துறங்கவோ
இயலாதபடிக்கு
நெஞ்சாங்கட்டையாய்
நீத்துப் போன நினைவுகள்....

விசிற முடியாதபடிக்கு
வெக்கையும், புழுக்கமும்
உள் எங்கும் புகைக்க
இதயங்களும் சமயங்களில்
சரலிக்கும்.

நட்சத்திரங்களும் எரிந்துபோன
இரவுகளிலோ
சூனிய வெளிகள் பல
வானமாய்த் தொங்கும்.

சொல்ல முடியாது;

சிலவேளைகளில்
அன்ரனாக்கள் மறைவில்
தூரவாய், தூசி படிந்ததாய்
துண்டுப்பிறை ஒன்றும் மிதக்கலாம்.

செம்பாட்டுப் புழுதியில்
முதற்றுளி பட்டதும்
துளிர்த்தெழும் சுகந்தமாய்
தோய்ந்து துவட்டும்
கூந்தலின் சிலிர்ப்பில்
சிக்கெடுக்கும் சில நினைவுகள்....

யார் கண்டது;

இறகொடிந்த தேவதைகள்
இடம் மாறிப் படர்ந்து
படுக்கையின் கசங்கல்களைச்
சுருக்கெடுத்தும் மறையலாம்
அக்கினிக்கு அவிர்பாகமாய்
அதுவே ஆலகாலமுமாய்....

ஒன்றுமே நிச்சயமாய்
சொல்வதற்கில்லை

மீண்டும் நாளைக் காலை
புதிய ஒப்பனைகளோடு
மறுபடியும் வாழவென
என்றும்போல் நீ
உயிர்த்தெழுவாய்!

# ஆவிகளுடன் ஒரு செவ்வி

ஆவிகளுடன் பேசலாமாமே!
அழைத்து வாருங்கள்.

அடைத்த புலன் வெளிகளின்
அரண்களை உடைத்து
அறியாப் பரிமாணத்தில்
அந்தரித்திருப்போரைச் சற்றே
அழைத்து வாருங்கள்.

ஏனென்று கேட்போம்.

அடிமை விலங்கொடிக்கத்தானே
ஆயுதப் பயிர் வளர்த்தோம்
விளைந்திட்ட கனிகளெல்லாம்
விலங்குகளாய்த் தொங்குவதேன்?

விளக்கங்கள் வேண்டுமென்போம்.

அக்கினிச் சுடர்கள் மீது
ஆயிரம் மல்லிகைகள்
ஆகுதியாய்ச் சொரிந்து செய்த
அஸ்வமேத யாகத்தில்
தேவனைத் தேடியொரு
தேரோட்டம் காத்திருக்க
பூதங்கள் புகுந்தங்கு
புலால் தேடி அலைந்ததென்ன?

பூரியரே! சொல்க என்போம்.

குஞ்சுங் குருமானும்
கூடுவிட்டு வருமுன்பே
பிஞ்சுகளில் கருக
விதவைகளை என் தேசத்தின்
வித்துக்களாய் விதைத்து விட்ட
விவரணங்கள் கேட்டு நிற்போம்.

குருவிச்சை வாழ்வு தேடி
கூனிகளாய்ப் போனவரை
குத்தி நிமிர்த்தவொரு
இராமனைப் பிரசவிக்க
கூதல் நாடுகளில்
கோசலைகள் உளரோவென்று
விண்ணின்று விழிப்போர்க்கு
வினாக்கள் சில முன் வைப்போம்.

பஞ்சாங்கச் செய்திகளுக்கோர்
பட்டிமன்றம் நிறுவி
புதிய கருத்துக்களைப்
புலன் விசாரணையில் நிறுத்தும்

கற்கால நாகரிகம்
கலியுகத்தில் மலர்ந்துவிட்ட
காரணிகள் காண்பதற்கு....

அழைத்து வாருங்கள் அந்த
ஆவி உலகத்தோரை

அ. கந்தசாமி

# இராமாயண அனுமார்களும் நவீன நீரோக்களும்

இதிகாச காலத்து
அனுமார்கள் எல்லாம்
இலங்கையின் இன்றைய
மனிதர்களாக,
இருந்த சில இராமர்களும்
வனவாசம் போயினர்.

கிளைகளில் படர்ந்தவை
தளைகளை உடைத்து
தரையினில் இறங்கின.

பூவிதழ் வளைகளின்
புண்ணீரில் ஆற்றலைகள்
மச்சங்கள் மாந்தி
மிஞ்சிய மனிதங்களை
மகாவம்ச காவியத்தின்
எச்சமாய்க் கரையொதுக்கும்.

போதி சத்துவனும்
போயாவே போதும் என்று
பேய் உறக்கம் கொண்டுவிட்ட
புனிதர்கள் ஆட்சியின் கீழ்
புன்னகைகள் கூடப்
புகை இழையில் மரணம்.

நான் பிறந்த தேசம்
ஒரு
நவீன மயானம்.
தவணை முறையில்
அங்கு
தமிழர்கள் தகனம்.

எல்லாளன் தேசத்தை
எரிதழல்கள் சூழ
எல்லைகள் கடந்த சிலர்
ஏக்கத்தின் தேடலுக்காய்
பியர் நு ரை நொதிப்பில்
மெட்டெடுத்து
திசைக்கொன்றாய்
இசை மீட்ட
இங்குதான்
எத்தனை நீரோக்கள்!

அ. கந்தசாமி

# வட்டத்துள் வாழ்வு

பிரபஞ்சப் பெருவெளியில்
பின்னல் இழைபரப்பி
ஒருமையம் தேடும்
துளிவிந்தின் சிதறல்கள்....
ஒன்றிற்குள் பலவாய்
கோடியாய்ப் பரந்து
கோலோச்சும் வட்டங்கள்....

வட்டத்து வளைவினிற்குள்
ஓர்
வானவில் வாழ்க்கை,
மான், மரை வேட்டைக்கென்று
தாம் விரைத்த கண்ணிகளுள்
பட்டுத் தலை இழக்கும் பயிர் முளைகள்...
நேற்றைய துமிகளில்
துளிரெடுத்து மீண்டும்
தளிர் விரிக்கும்
இன்றைய மனிதங்கள்.

ஒட்டிய உதடுகளின்
ஓரங்களிற் கசிவாய்
ஒளிந்திடும் புன்னகைகள்
பார்வையின் திருப்பத்தில்
போர்வையை நீக்கிப்
பொல்லாங்கில் பொருமும்.

ஏறிடும்காலை எருதுடன் பிணக்கு
இறங்கிடும் வேளையில்
இடையனின் முறைப்பு!

எதற்கென்று நெளிய...
எங்கு சென்று ஒளிய...

காற்றொன்று மட்டுமே
காசின்றிக் கிடைக்கும்.
நிலவும் சில சமயம்
நிறமற்ற கறைவடிவாய்
முற்றத்தில் நிழல் விரிக்க
முதலேதும் கேட்பதில்லை.

ஆண்டவன் படைப்பினில்
ஆழியாய் பெருகிடும்
ஆயிரம் சொந்தங்கள்...
இவனது வாழ்வினுக்கோர்
இருப்புக்கள் எடுத்தால்
எண்ணங்கள் மட்டுமே
மிச்சமாய்த் தங்கும்.
மச்சமாய்த் தானுமங்கு
மனிதனுக்கோர் இடமில்லை!

அ. கந்தசாமி

6/49

இருபத்தி ஐந்து கோடிகளின்
இமைகளில் தூங்கும்
இலட்சியக் கனவுகள்

இதய அறைகளின்
இருட்டு மூலைகளில்
உருத்திராட்சம் உருட்டும்
ஊமைக் கனவுகள்.

புதனும் சனியும்
நம்பிக்கைப் பூக்களாய்
தேவைக்கு ஏற்றாற்போல்
தேவனின் பிறப்பாய்....

நிழலாடும் ஆசைகளில்
நீராடும் மனக் குரங்கு
கோபுர நினைப்பினிலோர்
கொத்தடிமை வாழ்வு.

*"கண்டுப்புளியடி வைரவரே!*
*வேட்டுக் கொழுத்தி*
*உமக்குமோர் குழுத்தி*
*சாயி பாபாவுக்குமோர்*
*சாயலட்சை பஜனை!*

கொழும்பிற்குப் போனால்
கொச்சிக் கடையானுக்கும்
நம்பிக்கை வைத்தே
நாகூர் ஆண்டவர்க்கும்
கட்டாயம் விழும் என்றால்
கும்பாபிஷேகம் முடிந்த
குஷ்பாம்பாள் கோயிலுக்கும்

பாவம், பொடியள்
பத்திலொரு பங்கு
பாத்து
அவங்களுக்கும்......"

கனவுகள்... கனவுகள்
காக்காய்க் கனவுகள்
கானல்நீர்க் கலங்கலின் பின்
கலைமான்கள் ஓட
அதிஷ்ட அக்கினியில்
சிறகெரிக்கும் இலையான்கள்

அ. கந்தசாமி

# ஓ...! அந்தப் புள்ளிகள்.....

இசை என்பது
ஒரு
கந்தர்வ வேள்வி.

ஆத்மாவின்
பிரசவ இம்சையில்
பிறந்திடும்
வசந்த உயிர்ப்பூக்கள்.

ஊற்றெடுத்த எரிமலையுள்
ஊனோடு புகுந்து
உயிரோடு மீண்டுவரும்
ஒரு சித்து விளையாட்டு.

மனிதக் கூட்டினுள்
நிலைகொண்டு
மானசீக வெளியில்
இறகு விரிக்கும்
ஓர் இந்திரஜாலம்.

என் நண்பனே!

மணிக்கூண்டின்
துடிப்பொலியில்
மரணிக்கும் காலமும்
குடும்பத்தின் கொலுவினிலே
கோலோச்சும் அமைதியும்
பொன் பொருள்
அத்தனையும்....

பற்றிக் கொண்ட
இசை நெருப்பின்
இதழ்களுக்கு
நீ வழங்கும்
ஏகலைவக் காணிக்கை!

இந்த
எள்ளுப்பூத் தலைகளிடம்
எதனைத்தான்
எதிர்பார்க்கிறாய்?

கரவொலியின் கானங்கள்....
வீதியில்
நீ நடந்தால்
உன்மீது
வீசப்படும்
விழி வலைகள்....

நடக்கட்டும்
உன் பயணம்.

உனக்கு
வார்த்தைகளில்
மட்டும் தானே
எதிர் நீச்சல் தெரியும்

வாழ்க்கையில்....?

என் இனிய நண்பனே!
அதோ
தொடுவான ஓரத்தில்
தத்தளிக்கும்
அந்தப் புள்ளித்தலைகள்
ஓ!
உன் குடும்பம்தானே!
மறந்து விடுவோம்
உன் குடும்பம்தானே!

அ. கந்தசாமி

# விதைகள் உண்டு விளைநிலம் வேண்டும்

கைகளில் கொஞ்சம்
காஞ்சோண்டி விதைகள்
பைகளில் நிரம்ப
ஊமத்தை முளைகள்....

விதைத்திட எமக்கோர்
விளை நிலம் வேண்டும்.

காட்டிக் கொடுத்தலும்
காழ்ப்பு நினைத்தலும்
எம் கலாசாரத் தறியின்
கலர் நூல் நெசவுகள்.

அன்றலரும் மலர்களுக்கு
அம்மணமே அழகூட்டும்.
ஆடைகள் அணிந்தும் நாம்
அம்மண ஆண்டிகளே!

அடுத்தவன் அவலினில்
அரைக்கை உமியை
கலப்படம் செய்தபின்
ஊரினைக் கூட்டி
ஊதியே உண்போம்.

சமைந்த பெண்ணுக்கு
சடங்குகள் வைத்து
சல்லிகளும் சேர்ப்போம்.

சம்பந்தம் பேசிடில்
சாதிகளும் பார்ப்போம்.

நிலவையும் நட்சத்திரத்தையும்
கற்பழிக்கும் ஆசை
எல்லாரையும் போலவே
எங்களுக்கும் உண்டு.

எங்கள் இரவுகள் மட்டும்
பனிநீரில் ஸ்நானித்து
புதிதாய்... புதிதாய்...

அ. கந்தசாமி

# காலத்தின் கரங்கள்

பொத்திய கைகளுக்குள்
போர்த்திய காவலிது.

வரப்பொன்று கீறி
வர்ணனுக்கு விழி விரிக்க
வழிந்ததோ குருதி வெள்ளம்.

கோடி சூரியர்கள்
கூடி நின்று வேலிகட்ட
ஸ்பரிசித்த
காற்றெல்லாம் கனலாச்சு.

வெண்ணிலாவைத் தரைக்கிழுத்து
பொட்டு வைத்துப் பார்க்கவென
போதையில் ஒரு முயற்சி.

முளை கட்டு முன்னர்
மொட்டுக்களால் தன்னை
தளையிட்ட காரணத்தால்
கோட்டானும் கூகைகளும்
கூற்றுவராய்ச்
சூழ்ந்துகொள்ள....

கட்டு விரியன்கள்
காற்றில் புணர்ந்து
கக்கிய
பாஷாணப் பாசனத்தில்
பயிராகுமோர் வேர்நிலவு.

கருமுகிலில் சொட்டெடுத்து
கையணைப்பில்
பாத்திகட்டி
கர்ப்பத்தைக் காத்திருக்க
கற்பூரமேந்தும்
காலத்தின் கரங்கள்.

# எல்லைக் கோடாய் எழுந்து வா மாவலியே!

உன்னில் நான்
முக்குளித்த
மைம்மலான மாலைப் பொழுதில்
ஊசிக்கால் இலைகள்
தோரணமாய் உதிர்ந்த
மூங்கில் புதர்களின் விழிம்புகளை
மோகத்தோடு நீ
முத்தமிட்டுக்கொண்டிருந்தாய்.

உன் ஸ்பரிச தரிசனம்
கிட்டும் கணம் வரை
கானல் நீரோடும்
பாலை வெளிகளும்
வானத் தூமியில்
மானத் துகில் உடுத்தும்
பாசிப் படர்வுகளும்
ஆறுகள் என்று தம்மை
அறிமுகம் செய்தன.

அ. கந்தசாமி

முதலிரவின்
மெல்லிய ஒளிக்கசிவில்
சௌந்தரியத்தின்
எந்தவொரு மச்சத்தையும்
ஒளித்து மறைக்காது
நாணத்தின் நாடாவை
இழக்கிய புதுப் பெண்ணாய்
உன்னில் நானும்
என்னில் நீயுமாய்.

உன்னை நிர்வாணமாய்
அள்ளிப் பருகும் வரை
காவிரியும் கங்கையும்
சிந்துவும் தேம்ஸும்
நையாகராவும் நைல் நதியும்
கற்பனை வடமிழுத்து
என்னைக் காயப்படுத்தின.

மூங்கில் முகடுகளில்
தென்றலின் நுழைவு
அபிநய கானமாக
ஆற்றுப் படுக்கையில்
அடர்ந்த பெரு நிழல்கள்
மௌனத்தில் கண் துயில
விலை மாதின் அலட்சிய
ஆகர்ஷிப்போடு நீ
அசைந்து கொண்டிருந்தாய்.

உன் ஆலிங்கனத்தில்
அள்ளுண்ட போதுதான்
தொடுவானத் தூரத்தை
தூக்கி நிறுத்தவென
ஆசையும் பிறந்தது
எங்கள்
அடிவான எல்லைகள்
அகலப்படவேண்டிய
அவசியமும் புரிந்தது.

என் சகோதர எதிரியின்
சாக்கடையாக நீ
கடலோடு கலப்பானேன்?

மாவலி நதிக்ரையில் ஓர்
மாபெரும் நாகரிகம்
துப்பாக்கிப் புகையில்
துளிர்விடக் கூடாதா?

எதிர்கால ஈழத்தின்
எல்லைக் கோடாக
எழுந்து வா நதியே!

அ. கந்தசாமி

# ஒரு வீணை நாதமிழக்கிறது!

கொடிய மனமுடையோர்
கோபுரத்து உச்சியிலே
கொடிகட்டிப் பறக்க....

பொய்யும், புரட்டும்
ஆறாறு மாதமாய்
ஆட்சியிலே பங்கெடுக்க...
கைநாட்டுக் கேசுகள்
கற்றோராய்க் காட்சிதர...

தெய்வங்கள் கொலுவிருக்கும்
தேரோடும் வீதிகளில்
கட்டாக் காலிகள்
கால் தூக்கி நின்று
அபிஷேகம் செய்ய...

நீதிதேவன் ஆசனத்தில்
குற்றவாளி ஒருவன்
குந்தி இருந்து கொலை
கொள்ளை, கொடுமைகளை
ஆராதித்து ஆலவட்டம் சுற்ற......

ஊரறிந்த பரத்தைகள்
உத்தமிகள் தாமென்று
உறுதிமொழி சொல்ல....

பத்தினிகள் எல்லாம்
பொட்டழித்துப் பூவொழித்து
வெள்ளைக் கலையுடுத்தும்
காலமிது கலைமகளே

தீயோர் சிலரைத்
தீயிலிட்டு
நல்லோர் பலரை
நட்டாற்றில் மீட்டிடவே
நீளாத உன் கரங்களுக்கு
துருப்பிடித்த வீணை ஒரு கேடா?

தூர எறிந்துவிட்டுப்
போடி போ

அ. கந்தசாமி

# வானம்பாடிகளும் வல்லூறுகளும்

புதிய பூக்களின்
பூபாளப் புனலாடல்
மர நிழல்களும்
மரித்த
எங்கள் ஊர்
தோட்டத்திலா?

கிள்ளியெறிந்து
கள்ளிகள் நடுங்கள்!

எங்களுக்கு
முதுகு சொறிய
காஞ்சோண்டிகள் தானே
பதியம் வைத்தோம்
கனகாம்பரம் முளைப்பானேன்?

புதிய பூம்பதிகளின்
நடுகையும்
நீர் தெளிப்பும்
இலை துளிர்ப்பும்
எருக்கலைகள்
நிரை வகுக்கும்
எங்கள் தெருக்களிலா?

தேடிப் பிடித்து
மேயவிடுங்கள்
எங்கள் தோட்டத்து
எருமைகளை!

புதிய காற்றொன்று
புகுந்து விட்டதா
இந்தப் புகைமண்டலத்துள்?

இறுக்கிச் சாத்தி
சாந்து பூசுங்கள்
சாளர வெளிகளுக்கு!

பாசி பரந்த
எங்கள் ஒருவழிப்பாதையில்
வெளிச்சம் போடும்
அந்த விட்டில்கள் யார்?

பட்டுப் போன
மரக் கொம்பில்
படுத்திருந்த பாம்பெங்கே?

பாடும் இவ்
வானம்பாடிகளுக்கு
அங்கென்ன வேலை?

அ. கந்தசாமி

கசாப்புக் கடைக்குள்
கவியாடும் கோகிலமா?

பிடித்து வாருங்கள்;
முடிந்தால்
அதன் கதையை
முடித்து வாருங்கள்.

இறைச்சியைத் தின்று
இறகுகள் சேர்த்து
இலவம் பஞ்சடைப்போம்!

இது என்ன
அங்கு ஒரு
புதிய புன்னகை?

அதன் விகசிப்பில்
இதயங்கள்
மட்டும் தானே
தெரிகின்றன?

உதடுகளைப் பிய்த்து
உதிர்த்தெறிய
உங்களுக்கென்ன
உபதேசமா செய்ய?

அந்தக்
கார்காலச் சூரியனை
இயக்கப் படுதாக்களால்
பங்கருக்குள் மூடிவைப்போம்!

துருவப் பனிக்குளிரில்
கட்டியாய் விறைத்துப்போன
கனவுகளைப் பொறுக்கி
கண்களை
நிரப்பிக் கொள்வோம்.

சொற்களைத் தேடி
நாம்
போர் தொடுப்போம்
அது வரைக்கும்
சொக்க வைக்கும்
கவிதைகளை
நிறுத்தி வைப்போம்!

அ. கந்தசாமி

# எனக்கு ஒரு சுதந்திரம் வேண்டும்

அந்தப் புல்வெளியில்
புதைந்து
புழுக்கள் தேடி
சடுதியில் பலவாகி
வளியைச் சிதைத்து
வெளியில் சிறகடிக்கும்
புலுணிகளில் ஒன்றாய்
நானும்........

நட்சத்திரங்கள்
பொறி தட்டிச் சிதற
அண்டப் பெருவெளியில்
உடல் கரைத்து
காலப் பரிமாணம்
கரையுடைக்க
உயிர்த்துளிகள் சங்கமிக்கும்
அக்கணத்தில்
அவளாய் நானும்
நானாய் அதுவும்.........

மலை மொட்டின் மௌனத்தில்
அலை பாய்ந்து ருதுவாகும்
ஆற்றின் யவ்வனத்தில்
மின்னலிடும்
ஒரு துளியாய்
அதன் பின்னமாய்
பின்னத்தில் ஓர் பிசிறாய்
சில காலம்.......

சகாராப் பாலையில்
சாதகப் பட்சியாய்
கலையும் முகில்களை
விலைபேசிப் பார்த்ததில்
வீணான பலகாலம்.......

கதிர் நீக்கிப்
பதர் கொண்டு
எண்ணெயாய்த் திரியாய்
ஏற்றிடும் கோலாய்
எல்லாமாய்
கரித்துச் சலித்ததும்
காத்திருந்து களைத்ததும்
போதும்! போதும் !

இப்போது எனக்கு
சுடராகக் கொழுந்தெறிந்து
ஜோதியாய் ஜுவாலிக்க
ஒரு
சுதந்திரம் வேண்டும்.

அ. கந்தசாமி

# பம்மாத்து

உங்களால் எப்படி முடிகிறது?

மழைக்குளிர் கனத்த
மங்கலான
மாலைப் பொழுதினில்
மனித நதிகள் சங்கமிக்கும் துறைகளில்
ஒற்றைக் கால் தவத்தில் நீங்களும்;
ஓரங்களில் உறுத்தும்
இராவணன் மீசையைப் போல்
தற்செயலாய் நானும்.

வண்டியில் தொற்று முன்பே
நெஞ்சின் காழ்ப்புக்களை
எஞ்சினில் ஏற்றிவிடும்
எரிவில் திளைப்போரே!

எனக்காவே
பிரத்தியேகமாக
அரும்பு கட்டி
மடல் பிரிக்கும்
வசந்தப் பூக்களாய்
வாத்சல்யம் வலை வீசும்
இணக்கமான ஓர்
புன்னகையைச் செலவு செய்ய
எப்படி முடிகிறது உங்களால்?

நினைவில் கசப்பெரியும்
நெருப்புக் கணங்களிலும்
உங்கள்
இதழ்களின் நெழிவில்
நிலவின் உதயம்
எப்படிச் சாத்தியம்?

உங்கள் பார்வை வலயத்துள்
பட்டுவிட்ட
பாவத்திற்காக
'ஹாய்' சொல்ல
கைகுலுக்க
அசிங்கமாய்ச் சுகங்கேட்க
எப்படி
எப்படி
முடிகிறது என் இனிய
நண்பர்களே!

அ. கந்தசாமி

# முதற்காதல்

மகரந்தம் தொலைத்த
அந்தப் பூங்காடுகள்
பூப்பெய்திய வேளையில்
புல்லொன்றின் நுனியில்
நீ பூத்திருந்தாய்.

இதயத் தாமரையின்
ஒவ்வொரு இதழாலும்
உன் பெயரையே
உபாசிக்கச் செய்தாய்.

மயில் இறகின் கண்களில்
மையெடுத்து உனக்கு
பொட்டிட்டுப் பார்க்க
எனக்குள் உளைவெடுக்கும்
பிரசவத் தவிப்பு.

உன் பார்வையின் சாரல்
என்னை ஸ்பரிசித்த கணங்களில்
கலையும் மேகத்தில்
கை கோர்த்து மிதப்பதான
ஒரு கற்பனைச் சுகம்.

கால நகர்வில்
சொற்களை இழந்த
மொழியின் சோகமே
கன்னி கழியா எம் காதலின்
வீழ்படிவாய்....

இன்றோ....
பூங்காவனச் சோலைகளில்
புலம்பெயர்ந்த அநாதையாய்
அந்தரிக்கும் போதெல்லாம்
புற்களின் நுனிகளில்
பூ ஒன்று தேடுவேன்.

ஏனோ தெரியவில்லை
இப்போதெல்லாம்
புற்கள் பூப்பதே இல்லை!

# முடிந்தகாதல்

மூசும்பனி வெளியே
பாரமுள்ள பஞ்சாய்
படி இறங்கும்.
கூதல் காற்றும்
கொம்பு தடவிக்
குழை தேடும்.
முகமதியப் பெண்போல் நிலவும்
முகம் காட்ட மறுக்கும்.
வெளிறிய வானில்
வெருண்ட வெள்ளிப் பூக்கள்
அகதிகளாய் அயல்வானம் நாடும்.
சாளரக் கண்ணாடியின்
பாலாடைப் பரப்பால்
மெல்லிய ஒளி
உட்கசியும்.
முகட்டு வளை நோக்கி
முணுமுணுக்கும் எண்ணங்கள்
முனகித் தமக்குள்
நெட்டி முறிக்கும்.
முகராத முல்லைகளில்
மனம் லயிக்கும்.
பற்றிப் படர்ந்த
பவள மல்லிகையோ
பக்கத்தே குறங்கி
குறட்டை ஒலிக்கும்!

அ. கந்தசாமி

# அழிவு என்பது ஆரம்பமல்ல!

நினைவுகள் ஏன் இப்படி
நரை தட்டிப் போய்விட்டன?

திரை விழுந்த எண்ணங்களில்
நுரை பூக்கும் கற்பனைகள்.....
பொம்மலாட்டம் போலவே
இழைகளின் அசைவினில்
இழுபடும் சிந்தனைகள்....

நாளை என்பது
ஒப்பனையைக் கலைத்து
ஒதுங்கிடும் இருளில்
ஒரு கற்பனைச் சுகமாய்
விடியலின் வெளிச்சத்திலோ
கசங்கிய காகிதமாய்....

நம்பிக்கைகள் ஏன் இப்படி
நாடி தளர்ந்து விட்டன?

பருவ காலங்களில்
பழகிய நிலவுகள்
உருவங்கள் சிதைந்த
உள்வெளிப் பரப்பினில்
அன்றுபோல் இன்றும்....

காத்திருத்தல் என்பது
எத்தனை காலம்?

இறக்கும் வரை...
இறந்த பின்....
அதற்கும் அப்பால்...?!

வரலாற்றின் எச்சோச்சமாய்
ஒரு ஆதாமும் ஏவாளும்
ஜோடி சேரும் காலம்
எப்போது உதயம்?

அப்போது கூட
அரவமும் ஆப்பிள் கனியும்
பின்னணிப் பகையாய்
இல்லை என்றுறுதி செய்து
பிணைப் பத்திரம் தருவோர் யார்?

அழிவின் பின்னால்
அடுத்தொரு ஆரம்பமாமே?

சத்தியத்தின் சமாதியில்
சாத்தான் வேதம் ஓத
விட்டில் நினைவுகள்
அகலின் சுடர் நோக்கியே
மீண்டும்.... மீண்டும்....

அ. கந்தசாமி

# பாட்டொன்று நான் பாடவேண்டும்

நினைவுகளின் நிசப்தத்தை
நிறுத்திச் சலனித்து
காலப் போர்வையினுள்
கண் மூடித் துயிலும்
கனவு மனிதர்களை
பண்ணால் அடித்தெழுப்பும்
பாட்டொன்று நான் பாடவேண்டும்

புதுக்கவிதை எழுதவென
புற்றெடுத்த கறையான்கள்
சப்பித் துப்புவதே
சங்க இலக்கியங்கள் என்ற
சஞ்சல நினைவுகள் மேல்
சாட்டை வரிக் கோடுகளாய்
பாட்டொன்று நான் பாட வேண்டும்

வீதியில் நிற்பாளோடு
விலை பேசிக் கலவி செய்தால்
காசுபோம் என்பதாலே
சீதனமும் சீருமாய்
சீலைப்பேன் வாழ்வலையில்
கட்டிலில் உடல் விரிக்கும்
கன்னியின் கருப்பைக்குள்
கற்பினைத் தேடிச் சுழியோடி
பாட்டொன்று நான் பாடவேண்டும்.

அ. கந்தசாமி

எழுத்துலகில் நின்று
பயிர்நடவு செய்வோரின்
பச்சை இலக்கியங்கள்
கலைகளைத் தேடியே
காயடிக்கும் கோலத்தை
கைவீச்சால் சாய்த்து
பயனுள்ள
பாட்டொன்று நான் பாட வேண்டும்

ஆத்திரத்தைக் காட்டவென்றால்
ஆனான தமிழிலே
சொற்பஞ்சமாமதனால்
அச்சழுத்தங் காணாத
அழுக்கு வார்த்தைகளால்
இலக்கியம் செய்வோரை
ஆடைகளை அவிழ்த்த
அங்காடிச் சொற்களினால்
அபிஷேகித்து
பாட்டொன்று நான் பாடவேண்டும்

நாடற்றோர் இனமொன்றை
நட்டுவக் காலிகளாய்
பெருக்கற்றொடரில்
பின்னலிட்டு
கூடல் நகரில்
கூத்தியாளோடு
குதித்தாடும் நாயகன் மேல்
நாலு வசவெடுத்து
நல்லதொரு
பாட்டொன்று நான் பாடவேண்டும்

அம்மா கலைவாணி
ஆளிழுக்க முடிந்தால்
தூளடிக்கத் தெரிந்தால்
ஏவறைகள் விடுவதையே
எழுத்தாக்க முடிந்தால்
பாட்டொன்று கேட்டா
பாவம் உன்னிடத்து
பல்லிளித்து நிற்பேன்?
சத்தியமாய் நம்பு
ஏதோ நல்ல தமிழ்ப் பாட்டு
பாட ஓர் ஆசை.....

அ. கந்தசாமி

# கல்யாணமாகாக் கற்பனைகள்

நிழல்களை உரித்து
நினைவுச் சுவர்களில்
நிணங்களாய் நெளியும் சித்திரங்கள்.
மறைப்புகள் மலர் தூவ
காமத்தின் நெருப்பில் கனன்றெழும்
சிருங்கார அலைகளின் கிளைகளில்
சிலந்தி வலைகளாய்
கருக்கட்டும் சில ஜனனங்கள்.

நிர்வாண அழகிற்கு
துகிலுடுத்தும் துச்சாதனர்
சொப்பனச் சாய்மனையில்
சுகமாகக் குதிரையோடி
கற்பனைச் சுகிப்பில் மீண்டும்
கனவித்து இறகு கோதும்
காதற் சுணைப்பில்
கணங்களும் உறைந்து
கட்டிகளாகும்

தேவஸ்தானத்தில்
அரளிகள் அரங்கேற
தாழையின் மடல்களிலோ
தழையாகச் சங்கிலிகள்.
தாமரை இதழ்களிலே
எண்ணங்கள் தடம் தேட
தண்டுகளின் பிணையலிலே
சிக்காடும் மனக்கால்கள்

புல்லாங்குழல்களின்
துளைகளை அடைத்து
அடுப்பூதக் குழல்செய்யும்
ஆலிலைக் கண்ணன்கள்
வெறுப்பூதும் உற்சவத்தின்
வெற்றிச் சங்கமத்தில்
துமிகள் இல்லாத் துளிகள்
இவன் போட்ட கோலங்கள்.

அ. கந்தசாமி

# Pha–ரோசும் நானும்

நினைவின் படிமத்தில்
நீறுபூத்த தணலாய்
கனன்றெழும்
கர்ப்ப இம்சைகள்
எத்தனை காலம்?

பூக்கள் கூட
இதழ் மணம் இழந்து
இலைகளாய் மலர்வது
என் தாய்மண்ணில்
எப்படிச் சாத்தியம்?

தங்களின்
சவப்பெட்டிகளுக்கு
ஆழமாய்க் கூராய்
ஆணிகள் சேகரிக்கும்
சில மனித வக்கிரங்கள்
மண்டையோடுகளை
மதுக் கலசங்களாக்க
சந்நதங்கொண்ட
சமுதாயச் சந்தையிது

என் தனிக்குரல் மட்டும்
எப்படித் தினை விதைக்கும்?

பண்ணைக் கடலலையை
பால் நிலவின் உதயத்தில்
ஒருமுறை பார்த்துவர....

பொன்னாலைப் பாலத்தில்
வீச்சு இறால் கூனிகளை
விலைபேசி வாங்கிவர....

கசூரினா கடற்கரையில்
கழுத்தழவு நீரில்
கணநேரம் மிதந்துவர.....

கால யந்திரம்
பின்நோக்கிச் சுழன்று
என் கலைந்த காலங்களை
ஏன்
மீட்டுத்தரக் கூடாது?

ஏக்கத்தின் புதைகுழி மேல்
என் எண்ணச் சமாதிகள்
அவற்றினுள் நான்
ஒரு தைலமிட்ட Phaரோ மன்னன்

அ. கந்தசாமி

# கானல்நீர் கனவுகள்

இங்கு ஒரு மனிதன்
இழந்த புன்னகைக்காய்
இடுகாட்டுப் பனிமண்ணில்
தேடி அலைகின்றான்.

மங்கையின் நினைவலை
மயக்கத்தில் சிலநேரம்
மலராய்த் துளிர்க்கும்
மனித உணர்வுகள்
பிரசவ கணத்தில்
கருச்சிதைவாகும்.

குலுக்கிட என்று
கரங்களைக் கொடுத்தால்
கொத்தாய்ச் சில விரல்கள்
கொள்ளை போய் இருக்கும்.

மனித இறைச்சிக்கு
மலிவுவிலை என்றால்
சந்தைகள் எல்லாம்
உன்
சதைகளால் நிரம்பும்!

பணமடிப்பின் ஓசை
பலமாகக் கேட்டால்
இதயங்கள் பலவும்
இடம் மாறிப் போகும்.

சோடிகள் மாற்றத்தை
சொர்க்கத்தில் நிச்சயிக்க
கர்த்தருக்கும் கனடாவில்
கையூட்டு உண்டு.
நிழலுக்கும் சேர்த்து
இங்கு நிலுவைகளும் உண்டு.

பனியில் நடந்தாலும்
பாலைவன உணர்வு!

விஷத்தில் வேரோடும்
வீணர்கள் கூடலில்
முளைத்துக் கிளைவிடும்
முகம் சிதைந்த பிண்டங்கள்!

எந்த முகத்தை
மெய் என்று நம்ப?

பொய் பூத்த முறுவல்கள்......
போலியாய் உறவுகள்.....

முகமூடிகள் கூட
முத்தங்கள் கேட்கும்.

ஊருக்குத் தெரியாத
உலைமூடி வாழ்க்கையில்
நிலவின் ஒளியில்
நீந்திடும் நினைவு
உனக்கும் எனக்கும்
உரித்தில்லாக் கனவு!



அறுபதுகளின் நடுப்பகுதியில் ஈழத் தமிழ் இலக்கியத்தின் முற்போக்குப் பாசறையில், புதியதொரு போர் முழக்கம் மேலெழுந்தபோது ஆற்றல் மிக்க இளம் படைப்பாளிகள் பலர் அணிதிரண்டு நின்றனர். அந்தப் பரிவாரத்தினுள் ஒரு படைவீரனாக, நிமிர்ந்த நெஞ்சுடன் 'படை நடை' நடந்து வந்தவர் அ. கந்தசாமி.

இவரது சகபாடிகள் பலரும் இலக்கியத்தில் பிரகாசிக்க, இவர் மட்டும் ஏனோ சிலகாலம் அஞ்ஞாதவாசம் போயிருந்ததனால், பலராலும் அன்று அறியப்படாதிருந்தார். உறங்குநிலையானது உயிரிகளின் உயிர்ப்பைக் கூட்டுமாம். படைப்பாற்றலுக்கும் அது பொருந்தும் போலும்!

இன்றோ கனேடிய தமிழ்க் கலைஇலக்கிய இரசிகர்களுக்கு இவர் நன்கு பரிச்சயமானவர். பத்திரிகைகள், வானொலிகள், வீடியோ சஞ்சிகைகள் யாவற்றிலும் இவரது இடையறாத ஏகபோகம். கதை, கவிதை, நாவல், நாடகம், சினிமா விமர்சனம் எனப் பன்முகப்பட்ட துறைகளிலும் தன் முத்திரையை ஆழப் பதித்துவிட்ட ஒரு நல்ல கலைஞர்.

புலம் பெயர்ந்தோர் வாழ்வியல் கோலங்களாக இவர் வரைந்துள்ள கவிதைகள், 'மேலைத்தேச மண் வாசனையை முகர்ந்து பார்க்க, இனி எமக்கு ஆங்கிலம் அவசியம் இல்லை' எனக் கட்டியங் கூறி நிற்கக் காணலாம்.

'கானல்நீர் கனவுகள்' கவிஞர் கந்தசாமியின் கனவுகள் மட்டுமல்ல – அந்நிய தெருக்களில் அந்தரித்துத் திரியும் ஒவ்வொரு தமிழனதும் கனவுகள் தான்!

– வெளியீட்டாளர்